மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், பங்குனி மாதம் 1-ஆம் நாள்.

IA.No.262/2021

in

OS.No.13/2019

மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, கஸ்பா மன்னார்குடி கீழ பத்மசாலவர் தெருவில் வசிக்கும் கோவிந்தராஜ் மனைவி, இந்து, 37 வயதுள்ள ராஜசெல்வி.

... மனுதாரர் / வாதி

//எதிர்//

1. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, சவளக்காரன் அஞ்சல், மேலத்தெரு, மாரியம்மன் கோவில் அருகில் வசிக்கும் கோவிந்தசாமி மகன், இந்து, 81 வயதுள்ள ஜோதி (இறந்தார்).
2. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, சவளக்காரன் அஞ்சல், மேலத்தெரு, மாரியம்மன் கோவில் அருகில் வசிக்கும் காலஞ்சென்ற ஜோதி மகன், இந்து, 60 வயதுள்ள ராஜசேகர்.
3. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, சவளக்காரன் அஞ்சல், மேலத்தெரு, மாரியம்மன் கோவில் அருகில் வசிக்கும் காலஞ்சென்ற ஜோதி மகன் இந்து, 55 வயதுள்ள இளங்கோவன் .

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

4. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, சவளக்காரன் அஞ்சல், மேலத்தெரு, மாரியம்மன் கோவில் அருகில் வசிக்கும் காலஞ்சென்ற ஜோதி மகள், இந்து, 53 வயதுள்ள மாலா .
5. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, சவளக்காரன் அஞ்சல், மேலத்தெரு, மாரியம்மன் கோவில் அருகில் வசிக்கும் காலஞ்சென்ற ஜோதி மகள், இந்து, 50 வயதுள்ள மாரியம்மாள்.

... எதிர்மனுதாரர்கள் / LRs of the deceased 1st Defendant

இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஜோதி இறந்த தேதியான 19.04.2021 ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்யப்படாததால் 1ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு (abate) அற்று போய்விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9-ன் கீழ் மனுதாரர் / வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 31.08.2021

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 02.09.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார், அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. ரவிச்சந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ எதிர்வரும் 01.04.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 14--ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்/-A.சீதாலெட்சுமி),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)